**செய்தி வெளியீடு எண்: 421** **நாள் : 08.08.2014**

**பத்திரிக்கைச் செய்தி**

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் ஆகஸ்ட் 2014 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 09.08.2014 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆணையாளருக்காக

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | இந்து ஒற்றுமை கழக மேல்நிலைப்பள்ளி, 47/23, டி.கே. முதலி தெரு, சூளை, சென்னை 600 112 ( நடராஜ் தியேட்டர் அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை மேல்நிலைப்பள்ளி, 731, டி.எச்.ரோடு, புதிய வண்ணாரப்பேட்டை, சென்னை 81 ( தமிழ்நாடு தியேட்டர் அருகில்) |
| 3 | பெரம்பூர் | தர்மமூர்த்தி ராவ்பகதூர் களவல கண்ணன் செட்டி மேல்நிலைப்பள்ளி, குளக்கரை சாலை, பெரம்பூர், சென்னை 600 011 (பெரம்பூர் சர்ச் எதிரில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை உயர்நிலைப்பள்ளி, நெ 1, சங்கராபுரம் மெயின் ரோடு, சூளைமேடு, சென்னை 600 094 (சூளைமேடு காவல்நிலையம் அருகில்) |
| 5 | அம்பத்தூர் | ஊராட்சி ஒன்றியம் நடுநிலைப்பள்ளி, வேலப்பன் சாவடி, சென்னை 600 097 (ஜெஜலெட்சுமி திருமண மண்டபம் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, 4, பாடசாலை தெரு, கொளத்தூர், சென்னை 600 099 (கங்கையம்மன் கோவில் எதிரில்) |
| 7 | திருவொற்றியூர் | சென்னை மாநகராட்சி தொடக்கப்பள்ளி, எம். எம். டி.ஏ. மாத்தூர் 2வது மெயின் ரோடு, சென்னை 600 068 (மின்சார வாரிய அலுவலகம் அருகில்) |
| 8 | ஆவடி | நாரவாரி குப்பம் பேரூராட்சி சமுதாய கூடம், அண்ணா பேருந்து நிலையம், செங்குன்றம், சென்னை 600 052 (இந்தியன் வங்கி அருகில்) |
| 9 | தி.நகர் | சென்னை தொடக்கப்பள்ளி, 18, ஈஸ்வரன் கோயில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை –33 (காசி விஸ்வநாதர் கோயில் அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | சென்னை மாநகராட்சி அலுவலகம், வார்டு 182, எண் 8, 8வது கிழக்கு தெரு, தெற்கு அவென்யு, கிழக்கு காமராஜர் நகர், சென்னை –41, (திருவான்மியூர் பேருந்து நிலையம் மற்றும் சங்கரா பள்ளி அருகில்) |
| 11 | பரங்கிமலை | AJS நிதி மேல்நிலைப்பள்ளி, 52, பொன்னியம்மன் கோயில் தெரு, ஆலந்தூர், சென்னை–16. (பரங்கிமலை இரயில் நிலையம் அருகில்) |
| 12 | தாம்பரம் | புனித அந்தோணியர் ஆர்.சி. உயர்நிலைப்பள்ளி, காமராஜபுரம், அனகாபுத்தூர், சென்னை–70. (திருநீர்மலை மெயின் ரோடு, காமராஜபுரம் ஆர். சி .சர்ச் அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை மாநகராட்சி சமூகநலக்கூடம், வடிவேல் தெரு, கட்டபொம்மன் பிளாக், ஜாபர்கான் பேட்டை, சென்னை–83, ( கங்கையம்மன் கோயில் தெரு, நியாயவிலைக் கடை எதிரில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | பாலாக்கா மழலையர் மற்றும் தொடக்கபள்ளி, 13A, கணபதி காலனி இரண்டாவது தெரு, கோபாலபுரம், சென்னை–86, ( தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கோபாலபுரம் கிடங்கு பின்புறம்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி சமுதாயக் கூடம், 23/47, அருணாச்சலம் தெரு, சேப்பாக்கம், சென்னை –5. (ஆதாம் மார்க்கெட் எதிரில்) |
| 16 | சோழிங்கநல்லூர் | சமுதாய நலக்கூடம், NITகாலனி, வேளச்சேரி மெயின் ரோடு, நாராயணபுரம், பள்ளிக்கரணை, சென்னை–100, (பாலாஜி பல் மருத்துவக்கல்லூரி அருகில்) |

ஆணையாளருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**